செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

*பயிலரங்கத் தொடர் எண்ணிக்கை – 136* நாள்: **12.08.2026**

## சுவடி வாசிப்பும் பாதுகாப்பும்

## Reading and Preserving Palmleaf Manuscripts

**பயிலரங்கம் – 17**

**(28.08.2026 – 01.09.2026)**

## அறிவிப்பும் அழைப்பும்

பழங்காலத்தில் மனித இனம் ஒலிக்குறிப்பைக் கொண்டு தன் எண்ணக் கருத்துகளை வெளிப்படுத்தியது. அதன் வளர்ச்சி நிலையாகக் கோடுகளையும், குறியீடுகளையும் பயன்படுத்தினர். இக்கோடுகள் எழுத்துகளாக உருமாற்றம் பெற்றன. இவ்வாறான மாந்தர் இனத்தின் மொழி வளர்ச்சியில் தமிழ் தனிச்சிறப்பு உடையது. தொடக்க கால எழுத்து வடிவம் பல மாற்றங்களைப் பெற்று இன்றைய எழுத்து வடிவத்தை அடைந்தது. மண், பாறைகளில் எழுதப்பட்ட வரிவடிவம் சுவடிகளில் எழுதும் முறையாக வளர்ச்சியுற்றது. சுவடிகளில் எழுதும் முறையானது அன்றைய காலகட்டத்தின் கல்விசார் வளர்ச்சியில் மிகப்பெரிய புரட்சியாகும்.

பனை ஓலைகளை எழுதுவதற்கேற்ப பக்குவப்படுத்துதல் என்பது மிக நீண்ட பணியாகும். முதலில் தகுதியான ஓலைகளைத் தேர்வுசெய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட ஓலைகளின் நரம்புகளை நீக்கிப் பல்வேறு நிலைகளில் பக்குவம் செய்து, அவ்வோலைகளை அளவாக நறுக்க வேண்டும். பின்னர் சுவடிக்கட்டுகளை உருவாக்குவதற்காக ஓலையின் குறிப்பிட்ட இரு இடங்களில் துளையிட்டு நூலால் கட்ட வேண்டும். ஓலைக்கட்டுகளின் இரு புறங்களிலும் கட்டைகளை வைத்துக் கட்டி பாதுகாப்பு செய்ய வேண்டும். இவ்வாறாகப் பனை ஓலைகள் சுவடிகளாக உருமாற்றாம் பெறுகின்றன. மிகக் கடினமான உழைப்பிற்குப்பின் கிடைக்கப்பெறும் சுவடிகளில் எழுதுவது என்பது இடர்பாடுகள் நிறைந்த பணியாகும். சுவடிகளில் எழுதுவதற்கென்றே தனித்துவமாக உருவாக்கப்பட்ட எழுத்தாணியால் எழுதுவது மிகநுணுக்கமான கலையாகும். ஓலைகளுக்குச் சேதாரம் ஏற்படாமல் எழுத்தாணியைக் கொண்டு

எழுதுவற்குச் சிறப்புமிக்க பயிற்சியும் தனித்திறனும் பெற்றிருத்தல் வேண்டும். சுவடிகளில் எழுதும் பயிற்சிபெற்ற அறிவுச்சுடர் மிக்க புலவர்கள் தம் அறிவுச் செல்வத்தை தனக்கே உரித்தான தனித்துவத்தோடு சுவடிகளில் இலக்கியங்களாகவும், இலக்கணங்களாகவும் வடித்தனர். ஓலைகளில் எழுதப்பெற்ற அறிவுச் செல்வத்தைக் காலந்தோறும் பதிப்பித்துச் சுவடிகளின்வழி அழியாமல் பாதுகாத்து வந்தனர்.

பல்வேறு காலகட்டங்களில் நம் முன்னோர்களின் அயராத உழைப்பின், அறிவுச் செழுமையின் அடையாளமாகத் திகழும் சுவடிகளைப் படிக்கக் கற்றுக்கொள்ளுதல் மட்டுமல்லாது அவற்றைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் கற்றல் என்பது இன்றைய காலகட்டத்தின் முக்கியத் தேவையாகும். இளம் தலைமுறையினர் சுவடிகளைப் படிக்க, பாதுகாக்கக் கற்றல் என்பது நம் முன்னோர்களின் உழைப்பிற்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

தமிழ் இலக்கிய, இலக்கணத்தின் மரபுப் பெட்டகமாகத் திகழும் சுவடிகளை அழியாமல் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் அரிய பணியைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இத்தகையத் தொடச்சியான பணியின் ஒரு பகுதியாகச் “சுவடி வாசிப்பும் பாதுகாப்பும்” என்னும் பொருண்மையில் ஐந்து நாள் பயிலரங்கினைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கில் தமிழ்ச் சுவடிகளை வாசிக்கக் கற்றுக்கொடுத்தல், சுவடிகளைப் பாதுகாக்கும் முறை குறித்துப் பயிற்சியளித்தல் என்னும் முறைகளில் இத்துறை சார்ந்த பேரறிஞர்களைக் கொண்டு சுவடியியல் புலம் சார்பாக இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது. சுவடி குறித்துக் கற்றுக்கொள்ள விருப்பம் உள்ள முனைவர் பட்ட ஆய்வாளர்கள் மட்டும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம்.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை **– 20**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **28.08.2026** முதல் **01.09.2026** வரை **ஐந்து** நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை **10.00 - 1.00 &** மாலை **2.00 - 5.00**.

- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/avRA8bmnb9uRaHXM6 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.
- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 19.08.2026 காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 20.08.2026 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் 20 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**